FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8069827

C

1. District : மாவட்டம் மதுரை — PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு — Year ஆண்டு 2020 — FIR No. மு.த.அ. எண் 7/2020 — Date நாள் 11.11.2020

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by — Sections பிரிவுகள்: 7 of PC Act 1988 as
(ii) Act சட்டம்: the PC (amendment) Act 2018 — Sections பிரிவுகள்: amended by PC (Amendment)
(iii) Act சட்டம்: CrPC — Sections பிரிவுகள்: Act 2018 and 109 CrPc.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from நாள் முதல் : 10/11/2020 — Date to நாள் வரை :
Time Period : நேர அளவு — Time from நேரம் முதல் : 17.45 hrs — Time to நேரம் வரை : 23.30 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 11/11/2020 — Time நேரம் : 11.30 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 11/11/2020 — Time நேரம் : 12.30 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS. குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 55 கி.மீ தெற்கு
Beat Number : முறைக் காவல் எண் —
(b) Address முகவரி : வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகம் (கி.ஊ)
தி. கல்லுப்பட்டி,
மதுரை மாவட்டம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. R. திருமலை
(b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் இராமகிருஷ்ணன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : நாட்டினம் இந்தியன்
(e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்
Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation தொழில் மாவட்ட [illegible] ஆய்வுக்குழு அலுவலர்
(g) Address முகவரி : மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம் மதுரை

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) ① திரு. A. அழகு பாண்டி 47/20 த/பெ. அங்கச்சாமி வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), ② திரு. சி. தங்கம் 48/20 வாகன ஓட்டுநர் (TN58G0092) ③ திரு. க. அருண் [illegible] 41/20 த/பெ. கந்தசாமி (தொகுப்பூதிய அடிப்படை உதவியாளர்) வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகம் (கி.ஊ), தி.கல்லுப்பட்டி, மதுரை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
— தாமதம் இல்லை —

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the investigation / Refused Investigation / transferred to PS ........................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

11/11/20 — 11/11/2020

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 11/11/2020 14.00 hrs

Name: பெயர் ....................
Rank: நிலை .................... No. எண் ....................
(11/11/2020)

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

Honoured Sir, Submitted,

இன்று 11.11.2020-ம் தேதி 11.30 மணிக்கு, காவல் ஆய்வாளர் A.அம்புரோஸ் ஜெயராஜா ஆகிய நான், அலுவலில் இருந்த போது, மதுரை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு. இரா.திருமலை அவர்கள் மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நேரில் ஆஜராகி என்னிடம் தனி அறிக்கை அளித்தார். அத்துடன் ஒப்படைத்த மதுரை, தே.கல்லுப்பட்டி வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அலுவலகத்தில் நடத்தப்பட்ட திடீர் இணை ஆய்வு குறிப்புரை, நாள் 11.11.2020, மேற்படி திடீர் இணை ஆய்வின் போது கைப்பற்றப்பட்ட பணம் மொத்தம் ரூ.1,21,000/-, மேற்படி அலுவலகத்தின் நான்கு ஆவணங்கள் மற்றும் சம்பவ இடத்தில் அலுவலர்கள் அளித்த நான்கு வாக்குமூலங்கள் ஆகியவற்றை பார்வையிட்டேன். பின்னர், உயர் அதிகாரிகளிடம் தக்க அறிவுரை பெற்று இவ்வழக்கினைப் பதிவு செய்தேன். மேற்படி தனி அறிக்கையில் உள்ள விபரம் பின்வருமாறு. அனுப்புநர்: இரா. திருமலை, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மதுரை. பெறுநர்: காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ந.க. எண் ஐ1/314/2020, நாள்: 11.11.2020. அய்யா, பொருள்: திடீர் இணை ஆய்வு - மதுரை மாவட்டம் - ஊரக வளர்ச்சி துறை - தே.கல்லுப்பட்டி வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) கிராம செயலர்கள் மற்றும் ஒப்பந்தகாரர்களிடமிருந்து தீபாவளி மாமூல் வசூல் செய்வதாக கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட திடீர் இணை ஆய்வு - மொத்த மாமூல் தொகை ரூ.1,21,000/- பணம் மற்றும் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது - மேல் நடவடிக்கை எடுக்கக் கோருவது - தனி அறிக்கை அனுப்புதல் தொடர்பாக. நேற்று 10.11.2020-ம் தேதியன்று, திருமங்கலம் - இராஜபாளையம் மெயின் ரோட்டில் உள்ள தே.கல்லுப்பட்டி வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) மற்றும் பிற அலுவலர்கள் கிராம செயலர்கள் மற்றும் ஒப்பந்தகாரர்களிடமிருந்து தீபாவளி மாமூல் வசூல் செய்வதாக கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் பேரில், மேற்படி தே.கல்லுப்பட்டி வட்டார வளர்ச்சி (கிராம ஊராட்சி) அலுவலர் அலுவலகத்தில் 10.11.2020-ம் தேதி மாலை 17.45 மணி முதல் நானும், ஊ.த.க. பிரிவு காவல் ஆய்வாளர் அ. அம்புரோஸ் ஜெயராஜா மற்றும் காவல் ஆளிநர்களுடன் சேர்ந்து மேற்படி அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. திடீர் இணை ஆய்வுக்காக மேற்படி அலுவலக வளாகத்தின் உள்ளே நுழைந்த போது, அரசு வாகனம் TN 58 G 0092 Mahindra போலீரோ ஜீப்பில் புறப்படுவதற்கு தயார் நிலையில் இருந்த திரு.அ.அழகுபாண்டி, வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அவர்களிடம் அறிமுகம் செய்து கொண்டு, மேற்படி அலுவலகத்தில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்வது குறித்து தெரிவிக்கப்பட்டது. அவருடன் மேற்படி வாகன ஓட்டுநர் திரு.தங்கம் மற்றும் உதவியாளர் திரு.நடராஜன் ஆகியோரும் உடனிருந்தனர். தொடர்ந்து திரு. அழகுபாண்டி மற்றும் அவரது அரசு

வாகனத்தை சோதனை செய்த போது, வாகனத்தில் அவர் அமர்ந்திருந்த இருக்கைக்கு முன்பிருந்த டேஷ் போர்டை திறந்து அதன் உள்ளே இருந்து ஐந்நூறு ரூபாய் கத்தை ஒன்றை எடுத்து ஆஜர் செய்தார். அதனை நான் பெற்று எண்ணிப்பார்த்த போது, அதில் 60 ஐந்நூறு ரூபாய் தாள்களாக மொத்தம் ரூ.30,000/- இருந்தது. மேற்படி பணம் குறித்து திரு.அழகுபாண்டியிடம் விசாரித்த போது, தே. கல்லுப்பட்டி ஊராட்சியில் பல்வேறு கிராம நலத்திட்டங்களின் கமிஷன் மற்றும் தீபாவளி இனாமாக ஊராட்சி செயலர்கள் இன்று தனது அலுவலக அறையில், தன்னை நேரில் சந்தித்து கொடுத்ததாகவும், தான் அதனை பெற்று சற்று முன்னர் டேஷ் போர்டில் வைத்ததாகவும் கூறினார். எனவே, மேற்படி ரூ.30,000/- அவரிடமிருந்து என்னால் கைப்பற்றப்பட்டது. தொடர்ந்து, அனைவரும், மேற்படி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் முதல் தளத்தில் உள்ள திரு. அழகுபாண்டி அவர்களின் அறைக்கு சென்று அவரது அலுவலக அறையில் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அங்கு எந்த பணமும் கிடைக்கப்பெறவில்லை. மேலும், திரு.அழகுபாண்டி முன்னிலையில் மேற்படி அவரது வாகன ஓட்டுநர் திரு. தங்கம் என்பவரை சோதனையிட்ட போது, அவரது சட்டைப்பையில் ஐந்நூறு ரூபாய் கத்தையாக இருந்ததை எடுத்து ஆஜர் செய்தார். அதனைப் பெற்று எண்ணிப்பார்த்ததில், அதில் 24 ஐந்நூறு ரூபாய் தாள்களாக மொத்தம் ரூ.12,000/-இருந்தது. மேற்படி பணம் குறித்து ஓட்டுநர் தங்கத்திடம் நான் விசாரித்த போது, பல்வேறு ஊராட்சி செயலர்கள் தீபாவளி இனாம் கொடுத்ததாகவும், தான் அதனை பெற்று வைத்திருந்ததாகவும் கூறினார். எனவே, மேற்படி பணம் ரூ.12,000/- மும் அவரிடமிருந்து என்னால் கைப்பற்றப்பட்டது. தொடர்ந்து, வட்டார வளர்ச்சி அலுவகத்தில் பணியாற்றும் உதவியாளர் மேற்படி திரு. நடராஜன் என்பவர் வைத்திருந்த அவரது மதிய உணவு கைப்பையை சோதனையிட்ட போது, அவர் அதிலிருந்து, ஐந்நூறு ரூபாய் கத்தையை எடுத்து ஆஜர் செய்தார். அதனைப் பெற்று எண்ணிப்பார்த்த போது, அதில் 78 ஐந்நூறு ரூபாய் தாள்களாக ரூ.39,000/- இருந்தது. மேற்படி பணம் குறித்து நடராஜனிடம் விசாரித்த போது, நேற்றும், இன்றும் தங்கள் அலுவலகத்தில் ஊராட்சி தலைவர், ஊராட்சி செயலர்கள் மற்றும் வார்டு உறுப்பினர்களுக்கான VPDP பயிற்சி முகாம் நடைபெறுவதாகவும், அதற்காக ரூ.1,10,000/- ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், பயிற்சி செலவுக்காக முன்பணமாக ரூ.50,000/- மட்டும் காசோலை மூலம் தே.கல்லுப்பட்டி கனரா வங்கியில் மாற்றியதாகவும், அதில் சாப்பாடு மற்றும் பேனர் செலவுகளுக்கு ரூ.11,000/- செலவு நீங்கலாக மீதிப்பணத்தை அலுவலகத்தில் பாதுகாப்பு பெட்டகம் இல்லாத காரணத்தால் தான் வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். அலுவலக ஆவணங்களை சரி பார்த்த போது திரு.நடராஜன் கூறிய விவரங்கள் அனைத்தும் சரியாக இருந்ததால் மேற்படி பணம் ரூ.39,000/- திரும்ப ஒப்படைக்கப்பட்டது. தொடர்ந்து சோதனை செய்து கொண்டிருந்தபோது, அந்த அலுவலகத்தின் முதல் தள வராண்டாவில், திரு.அழகுபாண்டி அவர்களின் அறைக்கு

அருகில் சந்தேகத்திற்குரிய வகையில் நின்று கொண்டிருந்த அவரது தொகுப்பூதிய அலுவலக உதவியாளர் திரு.அருள்பிரகாசம் என்பவரிடம் விசாரித்த போது, தனது சட்டை பாக்கெட்டிலிருந்து ஒரு துண்டுச்சீட்டு மற்றும் பணம் ரூ.3,700/-யை எடுத்து ஆஜர் செய்தார். அந்த துண்டு சீட்டில் உள்ள பெயர் மற்றும் பண விபரம் குறித்து கேட்ட போது, தான் தீபாவளி செலவிற்காக தங்கள் அலுவலகம் வந்த பல்வேறு ஊராட்சி செயலர்கள் மற்றும் ஒப்பந்தகாரர்களிடம் தீபாவளி இனாமாக பெற்றதாக கூறி, அந்தப்பணத்தை தனது இருசக்கர வாகனம் TN 09 BF 6521 Hero Honda பெட்டியிலிருந்து 3 இரண்டாயிரம் ரூபாய் தாள்களும், 30 ஐநூறு ரூபாய் தாள்களும், ஆக மொத்தம் ரூ.21,000/-த்தை எடுத்து ஆஜர் செய்ய மேற்படி பணம் என்னால் கைப்பற்றப்பட்டது. தொடர்ந்து, கிராம ஊராட்சி பிரிவு அலுவலகம், கூட்ட அரங்கு, கணிணி அறை, முதல் தளத்தில் உள்ள கழிப்பறைகள் ஆகியவற்றை சோதனையிட்ட போது, மேற்படி கழிப்பறையின் இருட்டு பகுதியில் இரண்டு பணக்கத்தைகள் கிடந்தன. அவற்றை எடுத்து எண்ணிப்பார்த்த போது, அதில் ஒரு கத்தையில் 96 ஐந்நூறு ரூபாய் தாள்களாக மொத்தம் ரூ.48,000/-மும், மற்றொரு கத்தையில் 2 இரண்டாயிரம் ரூபாய் தாள்களும், 12 ஐநூறு ரூபாய் தாள்களும், ஆக மொத்தம் ரூ.10,000/-மும் இருந்தது. இதுகுறித்து திரு.அருள் பிரகாசத்திடம் விசாரணை செய்த போது, அவர் திரு. அழகுபாண்டி அவர்களின் அறையிலிருந்து, அவரது சாப்பாட்டு பையை எடுத்துக் கொண்டு வெளியே வந்த போது, தரைத்தளத்தில் திரு. அழகுபாண்டி அவர்களை லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனை செய்து கொண்டிருப்பதை பார்த்ததாகவும், எனவே பயந்து கொண்டு தனது பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த மேற்சொன்ன பணக்கத்தைகள் இரண்டையும் கழிவறையின் இருட்டு பகுதியில் வீசியதாகவும் தெரிவித்தார். எனவே, மேற்படி ரூ.58,000/- மற்றும் அவரது இருசக்கர வாகனத்திலிருந்து ஆஜர் செய்த பணம் ரூ.21,000/- ஆகியவற்றை விசாரணைக்காக என்னால் கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் இணை ஆய்வின் போது, அலுவலகத்தில் இருந்த அனைத்து அறைகளும் சோதனையிடப்பட்டது. சோதனையின் முடிவில், நான், வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.) திரு.அழகுபாண்டி, அவரது ஓட்டுநர் திரு.தங்கம், அவரது தற்காலிக அலுவலக உதவியாளர் திரு.அருள் பிரகாசம் மற்றும் திரு. நடராஜன் ஆகியோரை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி திடீர் இணை ஆய்வின் போது மேற்குறிப்பிட்ட அலுவலர்கள் முறையாக விபரம் தெரிவிக்க இயலாமல் வைத்திருந்த பணம் மொத்தம் ரூ.1,21,000/- கைப்பற்றப்பட்டது. மேல் விசாரணைக்காக (1) ஊராட்சிப் பணியாளர்கள் வருகைப் பதிவேடு - 2020, (2) தே.கல்லுப்பட்டி ஊ.ஒ. திட்டப் பிரிவு - 2020 வருகைப் பதிவேடு சுருக்கம், (3) முகாம் பதிவேடு (கிராம ஊராட்சி பிரிவு), (4) திரு.அருள் பிரகாசம் தனது பாக்கெட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த பெயர் மற்றும் பண விவரம் எழுதப்பட்ட துண்டுச் சீட்டு ஆகியவை கைப்பற்றப்பட்டது.

இந்த திடீர் ஆய்வின் போது, மேற்படி அலுவலகத்தில் இருந்த பொருட்களுக்கோ, ஆவணங்களுக்கோ, உடைமைகளுக்கோ எவ்வித சேதமும் ஏற்படவில்லை. தொடர்ந்து, ஊ.த.க. பிரிவு அலுவலகத்தில் இருந்து கொண்டு சென்ற மடிக்கணினி மூலம் திடீர் இணை ஆய்வு குறிப்புரை தயாரிக்கப்பட்டு இரவு 23.30 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி குறிப்புரையில் நானும், திரு.அழகுபாண்டி, திரு.நடராஜன், திரு.தங்கம், திரு.அருள் பிரகாசம் மற்றும் ஆய்வாளர் திரு.அ.அம்புரோஸ் ஜெயராஜா ஆகியோர் கையொப்பமிட்டு அதன் நகல் ஒன்றினை திரு.அழகுபாண்டி அவர்களிடம் வழங்கி ஒப்புகை பெறப்பட்டது. மேற்படி திடீர் இணை ஆய்வு சோதனையின் போது, திரு. அழகுபாண்டி, வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி), தே.கல்லுப்பட்டி அவர்கள் தனது அரசு வாகனத்தின் டேஷ் போர்டிலிருந்து எடுத்து ஆஜர் செய்ததன் பேரில் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.30,000/-. வாகன ஓட்டுநர் திரு. தங்கம் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.12,000/-, அலுவலக உதவியாளர் திரு. அருள்பிரகாசம் என்பவர் தனது இருசக்கர வாகனத்திலிருந்து எடுத்து ஆஜர் செய்ததன் பேரில் கைப்பற்றப்பட்ட பணம் ரூ.21,000/-, அவர் தனது பேண்ட் பாக்கெட்டிலிருந்து கழிவறையின் இருட்டு பகுதியில் வீசியதன் பேரில் கீழே கிடந்த இரண்டு பணக்கத்தைகளில் இருந்த மொத்தப் பணம் ரூ.58,000/- ஆக மொத்தம் ரூ.1,21,000/- பணத்தை இத்துடன் மேல் நடவடிக்கைக்காக தங்கள் வசம் ஒப்படைக்கிறேன். மேலும், திடீர் இணை ஆய்வின் போது மேற்படி அலுவலகத்தில் இருந்து கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் (1) ஊராட்சிப் பணியாளர்கள் வருகைப் பதிவேடு - 2020, (2) தே.கல்லுப்பட்டி ஊ.ஒ. திட்டப் பிரிவு - 2020 வருகைப் பதிவேடு சுருக்கம், (3) முகாம் பதிவேடு (கிராம ஊராட்சி பிரிவு), (4) திரு.அருள் பிரகாசம் தனது பாக்கெட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த பெயர் மற்றும் பண விவரம் எழுதப்பட்ட துண்டுச் சீட்டு ஆகியவற்றையும், திரு. அ.அழகுபாண்டி, திரு.நடராஜன், திரு.சீ.தங்கம், திரு.க.அருள் பிரகாசம், ஆகியோரை நான் தனித்தனியாக விசாரித்த போது அவர்கள் தானாக முன்வந்து அளித்த வாக்குமூலங்கள் ஆகியவற்றையும் இத்துடன் இணைத்து அனுப்பியுள்ளேன். தே.கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பணிபுரியும் 1) திரு.அழகுபாண்டி, வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி), தே.கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியம், 2) திரு.சீ.தங்கம், வாகன ஓட்டுனர், வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி), தே.கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியம், 3) திரு.க.அருள் பிரகாசம், தொகுப்பூதிய அலுவலக உதவியாளர் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி), தே.கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியம் ஆகியோர் ஊராட்சி செயலர்கள் மற்றும் ஒப்பந்தகாரர்கள் ஆகியோரிடமிருந்து தீபாவளி மாமூல் பணம் வசூல் செய்ததன் மூலம் சட்ட விரோதமான ஊழல் நடவடிக்கையில் ஈடுபட்டதாகத் தெரிகிறது. எனவே, மேற்கண்ட அலுவலர்கள் மீது உரிய சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமாறு இந்தப் புகார் மனுவை தங்களிடம் அளிக்கிறேன். ஒப்பம்/- XXXXX

11.11.2020 (இரா. திருமலை) துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மதுரை. இணைப்பு : 1 திடீர் இணை ஆய்வு குறிப்புரை, நாள் 10.11.2020. 2. பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள்- நான்கு. 3. கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் - நான்கு. 4. கைப்பற்றப்பட்ட ரொக்கம் ரூ.1,21,000/-.

Sir, Received this report today (11.11.2020) at 11.30 hrs along with Joint Surprise Check Proceedings, dated 10.11.2020, Four statements, Four Seized documents, Cash Rs.1,21,000/- . After obtaining permission from the Superior Officers, I (A.Ambrose Jayaraja, Inspector of Police, V&AC, Madurai) registered a case in Madurai V&AC Crime No. 9/2020 u/s 7 of Prevention of Corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 and 102 Cr.P.C. on 11.11.2020 at 12.30 hrs. Sd/- XXXXX (A Ambrose Jayaraja), Inspector of Police, V&AC, 11.11.2020

The original FIR along with Joint Surprise Check Proceedings, dated: 10.11.2020, special report, dated 11.11.2020 of Tr. R. Thirumalai, and 4 statements are submitted to the Hon'ble Special Judge, Special Court for the Trial of Cases under PC Act, Madurai and other copies were sent to the officers concerned.